# பாறை ஓவியம் மற்றும் குகைக்கலை

## காட்சியமைப்பு பற்றிய ஒலி, ஒளி உரை

## அரசு அருங்காட்சியகம், சென்னை




தொகுப்பாசிரியர்

முனைவர் **ரா. கண்ணன்**, இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.



வெளியீடு :
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை,
தமிழ்நாடு அரசு.

# பாறை ஓவியம் மற்றும் குகைக்கலை
## காட்சியமைப்பு பற்றிய ஒலி, ஒளி உரை
## அரசு அருங்காட்சியகம், சென்னை.


தொகுப்பாசிரியர்

முனைவர் **ரா. கண்ணன்,** இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.



வெளியீடு :
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை,
தமிழ்நாடு அரசு.

பதிப்பாண்டு - 2002
பிரதிகள் - 1000

© அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008,

விலை : ரூ. 80/-

முன் அட்டை : பாறை ஓவியம், *வெள்ளெரிக்கொம்பை,*
நீலகிரி மாவட்டம்.

பின் அட்டை : குகை ஓவியம், *சித்தன்னவாசல்,*
புதுக்கோட்டை மாவட்டம்.

பதிப்பகம் : ஸ்மார்ட் ஃபாண்ட்ஸ் (Smart Fonts)
17/8, 8-வது கிழக்கு தெரு
காமராஜ் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
☎ : 492 8700 / 492 6712

**முனைவர் ரா. கண்ணன்,** பிஎச்.டி., இ.ஆ.ப.,
ஆணையர், வேளாண்மைத்துறை மற்றும்
அருங்காட்சியகங்கள்,
அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தொலைபேசி : அலுவலகம் : 8193778
இல்லம் : 4341209
நிகரி : 8193035
மின்னஞ்சல் : govtmuse@md4.vsnl.net.in

# முகவுரை

வரலாற்றை சித்தரிக்கும் காட்சிக்கூடங்களைக் கொண்ட இந்திய அருங்காட்சியகங்களுக்குரித்தான, உண்மையான உருத்தோற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பாறை மற்றும் குகை ஓவியக் காட்சிக்கூடம் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. இக்காட்சிக்கூடம் சென்னை அருங்காட்சியகத்தின் 150வது ஆண்டு நிறைவுற்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது இதன் தனிசிறப்பாகும்.

இக்காட்சிக்கூடம் அமைக்கப்படுவதற்கு முன்பாக ஆய்வுக் குழுவொன்று பங்கேற்பு அணுகுமுறையினைக் கையாண்டது. காப்பாட்சியர்கள், அரசு கலைக்கல்லூரியின் சில அலுவலர்கள், அருங்காட்சியக ஆணையர் (இந்நூலின் ஆசிரியர்), மற்றும் கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வரின் முயற்சியுடன், தமிழ்நாட்டின் பல்வேறு மலைகளில், குகை ஓவியங்கள் அமைந்துள்ள அணுகவியலா இடங்களுக்கு பலசிரமங்களுக்கிடையே இக்குழுவினர் பயணம் மேற்கொண்டனர்.


நீலகிரியிலிருந்து 14கி.மீ தொலைவிலுள்ள *வெள்ளரிக்கொம்பை* என்ற இடத்தை செங்குத்தான பாறை மற்றும் பள்ளங்களைக் கடந்து அடர்ந்த காட்டிற்குள் சென்று அடைய வேண்டியிருந்ததே இதற்கு தக்கச் சான்றாகும். இக்குழுவினர் பிற மாநிலங்களில், அருங்காட்சியகங்களில் அமைக்கப்பட்டிருந்த பாறை ஓவியக் காட்சிக்கூடங்களுக்கும், தலங்களுக்கும் ஆய்வுப் பயணம் மேற்கொண்டனர். இவற்றுள் போபாலிலுள்ள மனிதனைப்பற்றிய *இந்திராகாந்தி அருங்காட்சியகம்,* போபாலிற்கு அருகாமையிலுள்ள *'பிம்பேட்கா குகைகள்'*, ஆக்ராவிலுள்ள *'இந்திய பாறை ஓவிய சமுதாய அமைப்பு'*, தில்லியிலுள்ள *'அருங்காட்சியகங்கள்'* முதலானவை முக்கியமானவைகளாகும். இதன் தொடர்பான செய்திக்குறிப்புகள் மற்றும் காட்சிக் கருவி கல்வி முறைகளும் சேகரிக்கப்பட்டன. பிரான்சிலுள்ள *'லஸ்காஸ் குகை'* அமைந்துள்ள விதம் பற்றிய விவரங்களும் இணையதளத்திலிருந்து கண்டறியப்பட்டது. இக்கையேட்டிற்கு பல நூல்களும் உதவின.


பாறை மற்றும் குகை ஓவிய இடங்கள் அவற்றிற்குரிய விவரங்களுடன், நேர்முகவர்ணனையாகவும், ஒளிவில்லை வடிவிலும் காட்சிபடுத்தப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் இந்த வர்ணனை மற்றும் காட்சி வழி முறைகளையும் தங்களுடன் எடுத்துச்செல்ல விழைவர் எனும் நோக்கில் எழுதப்பட்டதே இக்கையேடு. இங்கு அமைந்துள்ள காட்சிகளைப் பற்றி மட்டுமின்றி, இதற்கான வரலாற்று ஆதாரங்கள் அறிவுப்பூர்வமாக இக்கையேட்டில் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 2000 ஆம் ஆண்டில் இக்கையேட்டின் ஆசிரியரால் எழுதப்பட்ட *முழுமை படைப்புக் கோட்பாடு* (THEORY OF HOLISTIC DATING) எனும் நூல் சென்னை அரசு அருங்காட்சியக தனிவரைவு நூலாக வெளியிடப்பட்டது. உதாரணமாக இந்நூலின் அடிப்படையில் *வெள்ளரிக்கொம்பை* காட்சி விளக்கப்பட்டுள்ளது. குகை ஓவியப்பகுதியில் இந்து மற்றும் சமண சிற்ப மற்றும் புராண இலக்கியங்கள் மற்றும் வரலாற்று விவரங்களைப் பின்பற்றி புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள *சித்தன்னவாசல், திருகோகர்ணம்,* திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த *திருமலை* மற்றும் *மகாபலிபுரத்தைச்* சார்ந்த காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறினால் இக்கையேட்டினை செயல்முறை விஞ்ஞானம் போல் செயல்முறை வரலாறு எனலாம். தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு பாறை மற்றும் குகை ஓவியத்திட்டத்திற்கும், வெளியீடுகளுக்கும் தாராளமாக நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது. ஆய்வாளர்களுக்கும் இக்கையேடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம்.

சென்னை-600 008,
10.11.2002.

ரா கண்ணன்

முனைவர் **ரா. கண்ணன்,** பி.எச்.டி, இ.ஆ.ப.


1


2

# பாறை ஓவியம் மற்றும் குகைக்கலை காட்சியமைப்பு பற்றிய விளக்கங்கள்


சென்னை அரசு அருங்காட்சியகம் பாறை மற்றும் குகை ஓவியங்களைக் காண தங்களை அன்புடன் வரவேற்கிறது. இந்திய அருங்காட்சியகங்களுள் இக்காட்சிக்கூடம் தனித்தன்மையுடையதாகும். பாறை ஓவியம் என்னும் சொல் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டக் காலத்தைச் சேர்ந்த மக்களால் குகையின் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்கள் மற்றும் செதுக்கு ஓவியங்களைக் குறிப்பதாகும். (பன்னாட்டுச் சொல்வழக்கான பாறை ஓவியத்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட) வரலாற்றுக் கால ஓவியங்கள் குகைகளில் இருப்பினும் இவற்றைக் குகை ஓவியம் எனக் கூறலாம். இக்காட்சிக்கூடத்தில், வரலாற்றுக் காலம் மற்றும் அவற்றிற்கு முந்தையக் காலங்களைச் சார்ந்த பாறை மற்றும் ஓவியக் காட்சிகளைக் காணலாம். பாறை மற்றும் குகை ஓவியங்கள் அமைந்துள்ள இடங்கள் மக்களால் அணுகவியலாத நிலையில் உள்ளமையால், அவற்றை இக் காட்சிக்கூடத்தில் மக்கள் கண்டு துய்க்க காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## பாறைக்கலை மற்றும் பாறை ஓவியங்கள்


**1.** இப்போது நாம் இருப்பது அறிமுகக் காட்சிக்கூடமாகும். முதலில் நம் முன்னால் நாம் காண்பது கற்பாறைச் செதுக்கு வேலையாகும்.

பாறை ஓவியம், 'கற்பாறைச் செதுக்கு வேலை' மற்றும் 'கற்பாறைச் செதுக்கெழுத்து' என இருவகையாகப் பகுக்கப் பட்டுள்ளன. கற்கருவிகளால் பாறையின் மேல் செதுக்குவது கற்பாறைச் செதுக்கு ஓவியமாகும். கற்பாறை வரைவோவியம் என்பது குச்சியினால் மஞ்சட்காவி மண் கலந்து சிவப்பு மற்றும் வெள்ளை வண்ணங்களால் கற்பாறைகளில் வரைவதாகும். பொதுவான கருத்துப்படி சிவப்பு நிறம் வெள்ளை நிறத்தை விட பண்டைக்காலத்தைச் சேர்ந்ததாகும்.

**2.** இந்தியாவிலுள்ள மூன்றல்லது நான்கு கற்பாறைச் செதுக்கு ஓவிய இடங்களுள் ஒன்றான, விழுப்புரம் மாவட்டதைச் சார்ந்த ***'பெருமுக்கல்'*** எனும் இடம் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இச்செதுக்குச் சிற்பங்கள் பல்வேறு மக்களால் பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்களை, இராமாயணத்துடனும் சிலர் ஒப்பு நோக்கிக் கூறியுள்ளனர்.



3



4

3. நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த இந்த *இடுஹெட்டி* பாறை ஓவியத்தில் வரையப்பட்டுள்ள சூரியன், நட்சத்திரம் மற்றும் நிலா நமது மூதாதையர் வானுலக வழிபாட்டினை கற்றாய்ந்து வழிபட்டுள்ளதைக் காட்டுகிறது. வரலாற்றுக் காலத்திற்கு முந்தையக் காலத்திலேயே சோதிடர், வானியல் நிபுணர் மற்றும் மதகுரு இருந்திருக்கக்கூடும் என்பதையே இவ்வோவியம் காட்டுகிறது.

4. நீலகிரியில் கோத்தகிரிக்குக் கீழே ***வெள்ளெரிக்கொம்பை*** என்னுமிடத்தில் மலைகளுக்குள்ளே அமைந்துள்ள பாறை முகப்பில் உள்ளது ***'எழுத்துப்பாறை'***. *வெள்ளெரிக்கொம்பை* பாறை ஓவியத்தின் ஓர் பகுதியினை நாம் இப்போது காண்கிறோம். வழிபாட்டின்போது செய்யப்படும் யாகம் அல்லது வேள்வியினைக் காட்டும் சமய ஓவியமாகச் இக்காட்சி சித்தரிக்கப் பட்டுள்ளது. இக்காட்சி முனைவர் ரா. கண்ணன், அருங்காட்சியகங்களின் ஆணையர், அவர்கள் எழுதியுள்ள 'முழுமை படைப்புக் கோட்பாட்டுக் காலக்கணிப்பு' எனும் ஆங்கில நூலிலும், நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள 'தொடு திரையிலும்' விரிவாக விளக்கப்பட்டுள்ளது.


5



6

5. உலகிலேயே சிறந்த பாறை ஓவிய இடமாகத் திகழ்வது மத்தியப் பிரதேசத்திலுள்ள போபால் அருகிலுள்ள ***'பிம்பெட்கா'*** ஆகும். இக்காட்சிக் கூடத்தை அமைப்பதற்கு முன் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஆய்வுக்குழு இவ்விடத்திற்கு சென்று வந்துள்ளது. இக்காட்சியில் அரசர் தன் படைவீரர்களுடன் குதிரையின் மேல் செல்வதைக் காணலாம். அவர்கள் போர்க்கருவிகளை வைத்துள்ளனர். இங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளக் குதிரை மிக முக்கியமானதாகும். ஏனெனில் *19*-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போல், குதிரை பிந்தைய வரலாற்றுக் காலத்தில் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டதல்ல என்பதையும், குதிரை இந்தியாவின் பண்டைய விலங்குகளுள் ஒன்றென்பதையும் இக்காட்சி தெளிவுபடுத்துகிறது.

6. அடுத்ததாக நாம் காண்பது விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த ***கீழ்வாலையில்*** வரையப்பட்ட பாறை ஓவியமாகும். இதில் இடுகுறிகள் காணப்படுகின்றன. வரலாற்று ஆய்வு வல்லுநர்கள் சிலர் இக்குறியீடுகளை சிந்து சமவெளி எழுத்துக்கள் மற்றும் குறியீடுகளின் முன்னோடியெனவும், இக்குறியீடுகளிலிருந்தே *'பிராமி கைப்படியெழுத்து'* பின்னர் வளர்ச்சியடைந்தது எனவும் கூறுகின்றனர்.



7




8

7. இப்போது நாம் காண்பது வெண்மை நிற ஓவியங்கள். இவை நாம் முன்னால் பார்த்த நீலகிரியில் அமைந்துள்ள ***வெள்ளரிக் கொம்பையின்*** சற்று பிற்காலத்தைச் சார்ந்தாகும். இங்கு செம்மறியாடு, ஆடு மற்றும் மனித உருவம் தடியுடன் காணப்படுகின்றன. இம்மனித உருவம் ஆடுகளை மேய்க்கும் ஆட்டிடையன் உருவமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

8. இக்காட்சி விழுப்புரம் மாவட்டம், ***ஆலம்பாடியில்*** காணப்படுவதாகும். இது ஊடுகதிர் ஓவியங்கள், அதாவது விலங்குளின் உட்புற உறுப்புகள் தெரியும் வண்ணம் அமைந்துள்ளது. எனவே வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதர்கள் உடற்கூற்றமைப்புக் குறித்து அறிந்திருந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகின்றனர். இது ஒரு வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் உடலுறுப்பு வகுப்பாக இருக்கலாம்.






9. இப்பாறை ஓவியம் வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் ***சென்ராயன்பள்ளி***பிலிருப்பதாகும். இது வரி வடிவ அமைப்புகளைக் காட்டுகிறது. இவை வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளதால் பிற்காலத்தைச் சார்ந்தது என்பதைக் காட்டுகிறது. சில நேரங்களில் இத்தகு உருவங்கள் வரலாற்றுக் காலத்துடனும் ஒத்துப்போகின்றன. சிலுவை அல்லது கூட்டல் குறி வளமையின் சின்னமாக, *வெள்ளெரிக்கொம்பை, நீலகிரி* மற்றும் *ஹரப்பா* நாகரீக கால இடங்களில் காணப்படுகிறது. ஓவியத்தின் அடியில் இரு பறவைகளும், மையத்தில் ஒரு மனித உருவமும் உள்ளது. இந்த வரைவுகளே பிற்காலத்தில் வேதகாலத்து வடிவியல் சக்ர வடிவங்களின் அமைப்புக்கு முன்னோடியாக இருக்கலாம்.

10. இந்த செந்நிறமி ஓவிய வரைவு விழுப்புரம் மாவட்டம் ***ஆலம்பாடியினைச்*** சார்ந்தது. இது பறக்கும் பறவையின் உருவினைக் காட்டுகிறது. கண்ணால் காணும் காட்சிகளை பதிவு செய்யும் ஓர் முயற்சியாக இக்காட்சி அமைந்துள்ளது. தொடர் ஓவியங்களின் ஓர் பகுதியை நாம் இக்காட்சியில் காண்கிறோம்.




11




12

11. இப்போது நாம் காண்பது ***ஆலம்பாடியில்*** உள்ள பாறை ஓவியம். இது ஒரு பறவையின் உள்ளுறுப்புத் தோற்றமாக இருக்கக்கூடும். பறவையின் உள்ளுறுப்பு அமைப்புத் தோற்றத்தின் ஊடுகதிர் ஓவியம் இங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

12. அடுத்ததாக நாம் காணும் செந்நிறமி வண்ண பாறை ஓவியமும் ***ஆலம்பாடியினைச்*** சார்ந்ததாகும். வரையப்பட்ட பறவைகள் மற்றும் விலங்குகளின் தொடர்ச்சியினையே இது குறிக்கின்றது. மையத்தில் பறக்கும் பறவையின் உருவம் பெரிதாக தோற்றமளிக்கிறது.



13




14

13. இப்போது உங்கள் முன் இருப்பது விழுப்புரம் மாவட்டம் ***கீழ்வாலையைச்*** சார்ந்த செந்நிறமி வண்ண மூன்று ஓவிய உருவங்களாகும். மதகுருவால் அழைத்துச் செல்லப்படும் ஒரு ஆண் மற்றும் பெண் உருவம் இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது. நடுவில் உள்ள மத சமய குருவின் தலையில் இரு சிறகுகள் உள்ளன. அவர் தன் கைகளால் ஒரு நபரை அழைத்துச் செல்ல, மற்றொருவர் அதனைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். இக்காட்சி மனிதன் அல்லது விலங்கின் உயிர்பலிக் காட்சியாகவோ அல்லது வழிபாட்டு சடங்காகவோ இருக்கக்கூடும்.

14. நீங்கள் காணும் இந்த ***கீழ்வாலையைச்*** சார்ந்த செந்நிறமி பாறை ஓவியக் காட்சியில், ஏதோ ஒன்றின் மேல் ஒரு ஆணும் பெண்ணும் அமர்ந்துள்ளதைக் காண்கிறோம். அது விலங்காகவோ அல்லது உயர்ந்த கல்மேடையாகவோ இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



15




16

15. இக்காட்சி ***கீழ்வாலையின்*** பாறைப் படுகை குகையின் நுழைவாயிலைக் காட்டுகிறது. இது வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய இடமாகும். வெளியிலிருந்து காண்பதற்கு மனித சந்தடியற்ற கல்மலை போல் இது தோற்றமளிக்கிறது.

16. இங்கு விழுப்புரம் மாவட்ட ***கீழ்வாலையின்*** செந்நிறமி ஓவியங்கள் இடுகுறிகளைக் காட்டுகின்றன. வலதுபுறமுள்ள இரு வடிவியல் அமைப்புகள், இரு கூட்டல்குறிகள் எங்ஙனம் இணைந்து வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மங்கலக் குறி *(சுவஸ்திகை)*, அல்லது வளமைச் சின்னத்தை உருவாக்கின என்பதைக் காட்டுகிறது.




17



18

**17.** இது ***கீழ்வாலையில்*** காணப்படும் ஒரு செந்நிறமி வண்ண ஓவியம். இக்காட்சி அலகுபோன்ற மூக்கமைப்புடன் கூடிய முகத் தோற்றமுடைய நான்கு உருவங்கள் கைகோர்த்து நடனமாடும் காட்சியினைக் காட்டுகிறது.

**18.** இக்கட்டமைப்பு இந்தியாவின் மிக முக்கிய இடங்களுள் ஒன்றான '***பெருமுக்கலைக்***' காட்டுகிறது. இருப்பினும் முகப்புக் காட்சிக் கூடத்தில் கண்ட காட்சியிலிருந்து இது சற்று வேறுபடுகிறது. இங்கே '**கிண்ணம்**' போன்ற கற்பாறைச் செதுக்கு வேலையை நாம் காண்கிறோம்.




19



20

**19.** இதுவும் இந்தியாவின் மிக முக்கிய இடமான ***பெருமுக்கலைச்*** சார்ந்தது. நாம் ஏற்கனவே அறிமுகக்காட்சிக் கூடத்தில் கூறியுள்ளதைப் போல அறிஞர்கள் தங்கள் சிந்தனைத் திறனுக்கேற்ப மாறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர்.

**20.** இக்கட்டமைப்பில் ***பெருமுக்கல்*** மலையுச்சியில் உள்ள கோவில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் வரலாற்றுக் காலம் *சோழர்* காலம் முதல் *விஜயநகரகாலத்தைச்* சார்ந்ததாகும். கோவிலின் பின்புறம் பெருமுக்கல் குகையுள்ளது. இது கற்பாறைச் செதுக்கெழுத்து இடமாகும்.


21



22

**21.** நீங்கள் தற்போது மீண்டும் நீலகிரி மாவட்ட ***இடுஹட்டியிலிருக்கும்*** ஓர் இடத்தைக் காண்கிறீர்கள். நாம் முன்னரே சூரிய, சந்திர மற்றும் நட்சத்திர வழிபாட்டு உருவமைப்புகளைக் கண்டோம். இதில் சூரியகாந்தி போன்றதொரு பூ உள்ளது. இதனை தென்னிந்தியாவில் பொதுவாகக் காணப்படும் கோலம் அல்லது வடிவியல் அமைப்பு எனவும் கூறலாம். நீலகிரியில் சூரியகாந்திப் பூ வளர்வது இல்லை. ஆதலால், இது சமவெளியிலிருந்து மக்கள் நீலகிரி மலைக்கு இடம் பெயர்வதைக் குறிக்கின்றது.

**22.** தற்போது நாம் காண்பதை, பாறை ஓவிய வல்லுநர்கள் சிந்து சமவெளி கைப்படியெழுத்தின் முன்னோடியாகக் கூறுகின்றனர். இக்காட்சி நீலகிரியில் உள்ள ***இடுஹட்டியிலுள்ளது.*** பேராசிரியர் மதிவாணன் அவர்கள் 'பாறை ஓவியம்' என்ற தனது நூலில் இவற்றிற்கான பொருள் விளக்கமளித்துள்ளார். இருப்பினும் இடது பக்க ஓரத்தின் மேல்புறத்தில் பழமையான திரிசூல வடிவ உருவத்தினைக் காணலாம். கீழ்ப்புற வலதுகை மூலையில் சைவச் சின்னமான மூன்று பட்டை விபூதியினைக் காணலாம். தற்கால இடுகுறிகள் நமது மூதாதையரின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டக் காலத்தை ஒத்திருப்பதை இது காட்டுகிறது.




23




24

23 இக்காட்சி ***வெள்ளெரிக்கொம்பையில்*** அமைந்துள்ள எழுத்துப் பாறையின் ஒரு பகுதியாகும். அடுத்து வரும் காட்சியில் சில குறிப்புகளைக் காணலாம்.

24 இக்காட்சியின் ***(வெள்ளெரிக்கொம்பை)*** ஒரு பகுதியினை அறிமுகக் காட்சிக்கூடத்திலேயே நாம் கண்டோம். இக்காட்சியில் மேல்புற வலது கை மூலையில் சமயகுரு பலிபீடத்திற்குச் செல்லும் காட்சி சித்தரிக்கப் பட்டுள்ளதை ஆணையர் முனைவர் ரா.கண்ணன் அவர்கள் தனது நூலான **(Holistic Dating)** என்னும் ஆங்கில நூலில் விளக்கம் அளித்துள்ளார். இதன் மேல் 'வளமைச் சின்னமாக' ஓர் கூட்டல் குறி காணப்படுகிறது. வளமை பெற யாகத்தில் ஓர் மனிதனை பலிகொடுக்க அழைத்துச் செல்வது இங்கு கூறப்படுகிறது. முழுக்காட்சியும் சித்தரிக்கப்படாததால் பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் மனித உருவம் இங்கு காணப்படவில்லை. தெளிவற்றச் சில உருவங்களையும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய பறவைகளையும் நாம் இங்கு காண்கிறோம்.



25



26

25 இக்காட்சி ***வெள்ளெரிக்கொம்பையில்*** ஒதுக்குப் புறமாக அமைந்துள்ள எழுத்துப்பாறையைக் காட்டுகிறது. அருங்காட்சியகத் துறையின் ஆணையர் உள்ளிட்ட ஆய்வுக்குழு இவ்விடத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். இவ்விடத்தை அடைய சுமார் *10* கி.மீ. அடர்ந்த காட்டிற்குள் செல்ல வேண்டியிருந்தது. இப்பயணத்தில் பலர் காயமடைந்தனர். அடர்ந்த காட்டிற்குள் மனிதர்கள் அணுக முடியாத, கடினமான இடத்தில் இது அமைந்துள்ளது. வழுக்கி விட்டால் *1000* அடி கீழே விழ வேண்டிய அபாயகரமான பயணமாக இது அமைந்திருந்தது.

26 இந்த படத்தில் ஆணையர் முனைவர் ரா. கண்ணன் அவர்கள் கையில் கோலுடன் ***எழுத்துப்பாறை*** ஓவியங்களை விளக்கும் காட்சியை காண்கிறீர்கள். நிழற்படம் எடுப்பவர் ஒரு காட்சியை படமெடுப்பதையும் இங்கு காண்கிறீர்கள்.



27



28

27 இப்போது நாம் காண்பது ***வெள்ளெரிக்கொம்பையில்,*** பிற்காலத்தைச் சார்ந்த வெண்நிறமி ஓவியத்தின் ஓர் பகுதி. இதிலிருக்கும் ஓர் உருவத்தை, முன்பு *7*-வது படத்தில் நாம் கண்ட ஆடு அல்லது செம்மறியாட்டுடன் தொடர்புபடுத்திக் காணவேண்டும். இங்கு காணப்படும் இரு உருவங்களை சிலர் ஆண் பெண் என வலியுறுத்துகின்றனர். இவற்றை இரு நட்சத்திரங்களை கொண்ட '*அருந்ததி* என அழைக்கப்படும் விண்மீன்குழு எனவும் விளக்கலாம்.

## குகைக்கலை மற்றும் ஓவியங்கள்

குகை ஓவியத்தின் வரலாற்றுக் காலத்திற்கு நாம் இப்போது வந்துள்ளோம். புதுக்கோட்டை மாவட்டத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து உள்ள புகழ் பெற்ற ***சித்தன்னவாசல்*** குகை ஓவியம் இங்கு இடம் பெற்றுள்ளது. இக்குகையில் வாழ்ந்த ஜைன சமய துறவிகளை ஓவியங்கள் சித்தரிக்கின்றன. இங்கு தொடர்ச்சியாக மூன்று பிரிவுகளைக் காண்கிறோம்.

28 இந்த பிரிவில் விண்ணுலக நடனமாதினை (*அப்சரஸ்*) காண்கிறோம்.


29


30

29 இந்த பிரிவில் *பவ்யா* அல்லது சமணத் துறவிகளை தாமரைக்குளத்தில் யானையுடன் காண்கிறோம்.

*30* மீண்டும் நாம் காண்பது '*அப்சரஸ்*' எனப்படும் விண்ணுலக நடன மங்கையாகும்.

***சித்தன்னவாசல்*** ஓவியங்களை *அஜந்தா* ஓவியங்களுடன் ஒப்பிட்டு நோக்கலாம். இவைகளும் தாவர மற்றும் கனிம சாயப் பொருட்களால் ஆனவையாகும். இவற்றுள் ஒரு சில ஓவியங்களை இருபதாம் நூற்றாண்டின் நாற்பது மற்றும் ஐம்பதாம் வருடங்களில் பாதுகாக்க முயற்சிக்கப்பட்டன.



31



32

***புதுக்கோட்டையில்*** *பிரஹதாம்பாள்* கோவில் என அழைக்கப்படும் பிரசித்திபெற்ற *திருகோகர்ணம்* குகைக்கோவிலின் கடவுளான *ப்ருஹதாம்பிகை* முன்னாட்களில் அரச குடும்பத்தின் காப்பாண்மை கடவுளாகத் திகழ்ந்துள்ளார். இக்குகைக் கோவிலின் ஒரு பகுதி பாறையைக் குடைந்து செய்யப்பட்டதாகும். இக்குகைக் கோயிலில் *விநாயகர், சிவலிங்கம்* மற்றும் *கங்காதரர்* சிற்பங்களைக் காணலாம்.

**31** இந்த பிரிவில் *விநாயகர்* சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**32** கருவறையில் *சிவலிங்கம்* பெரிய உருளை வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தின் மிகப்பழைமையான *சிவலிங்கங்களில்* ஒன்றாகும். இந்த *லிங்கம் 8-9* ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.


33



34

33 இங்கு நாம் காண்பது *பிரஹகதாம்பாள்* கோவிலில் ***(திருகோகர்ணம்)*** உள்ள *கங்காதரருடைய* வடிவமைப்பாகும். *கங்காதரரான சிவனை* நோக்கி *கங்கை* வருவது போல சித்தரிக்கப்பட்டுள்ளது. *கங்கையைக்* கீழே எடுத்து வருவதை உருவகப்படுத்தி சித்தரித்துள்ளனர். இந்து புராண இலக்கியங்களில் *கங்கையினை* பறக்கும் தேவதையாக தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிரசின் மேலும் *கங்கையைக்* காணலாம். *சிவன்* நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார். மேற்புற வலது கையில் உடுக்கையும், *கங்கையை* ஏந்த ஏதுவாக இடது கையில் சடாமுடியினையும் பிடித்துள்ளார். கீழேயுள்ள இரு கைகளில் அவர் உடையின் மடிப்பை பிடித்துள்ளது போல் காட்சியளிக்கிறார். இங்கு நாம் காண்பது கி.பி. *8* அல்லது *9* ஆம் நூற்றாண்டின், பாண்டியர் காலத்தின் துவக்கத்திலிருந்த நேர்த்தியான புடைப்பியல் செதுக்கோவியங்கள்.

*34* அடுத்துள்ளது புதுக்கோட்டையிலிருந்து *22* கி.மீ. தொலைவில் உள்ள ***குடுமியான்மலையின்*** (புதுக்கோட்டை மாவட்டம்) பாறை செதுக்கு குகை கோவிலில் உள்ள *கணேசர்* உருவமாகும்.

*குடுமியான்மலையில்* அமைந்துள்ள, பண்டையக்கால *சோழ* குகைகோவிலில் இதர சமண மதக் காட்சிகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன.


35



36

35 அடுத்தபடியாக, நாம் காண்பது திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ***திருமலை*** மலையும் குகை வளாகமும் ஆகும். *பாஹுபலி* தனது இரண்டு சகோதரிகளுடன் இங்குக் காட்சியளிக்கிறார். இம்மலையில் அமைந்துள்ள மிகவும் உயரமான சிலை *நேமிநாதரது* ஆகும்.


36 இங்கு புதுக்கோட்டை மாவட்டம், ***சித்தன்னவாசலில்*** இருந்து மூன்று தீர்த்தங்கரர்கள் புடைப்பியல் செதுக்கோவியமாக காட்சியளிக்கின்றனர்.


37

37 *மகாபலிபுரத்தில்* உள்ள இக்காட்சி *மகாவிஷ்ணு* படைப்புக் காலத்தில் இருந்த *அனந்த சயன* நிலையை சித்தரிக்கிறது. புராணத்தில் விஷ்ணுவின் கொப்பூளில் பூத்த ஈரிலைத் தாமரையில் *பிரம்மா* அமர்ந்து உலகை படைத்துக்கொண்டிருக்கிறார் எனப்படுகிறது. மூன்று குணங்களான - *சத்துவம், ரஜஸ், தமஸ்*- ஆகியவற்றுள் முதலாவது தெய்வத்தன்மையையும் மற்ற இரண்டு மனிதத்தன்மையையும் கொண்டுள்ளன. *ரஜஸ்* மற்றும் *தமோ* குணங்கள் *மது* மற்றும் *கைடபனாக* சித்தரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் *விஷ்ணுவின்* காதுகளிலிருந்து தோன்றியவர்கள். காட்சிக் கூடத்தில் உள்ள கட்டமைப்பில் அவர்கள் இருவரும் பெரிய உருவில் விஷ்ணுவை தாக்குவது போல சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். *பூதேவி விஷ்ணுவின்* காலடியில் அவரை தொழுது கொண்டிருக்கிறார். இது படைப்புக்காலத்தை குறிக்கிறது. *ஆதிசேஷ* நாகத்தின் சுற்றுக்கு அருகில் *மார்க்கண்டேய* முனிவரும், *வருண* தேவரும் காணப்படுகின்றனர். அருகில் பறக்கும் உருவங்களாக *சங்கு* (பாஞ்சசன்யம்) ஆண் உருவமாகவும் மற்றும் *கதை* (கௌமோதகி) பெண் உருவமாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். மற்றொரு கூற்றுப்படி *யோக நித்ராவும் (விஷ்ணுவின்* அரிதுயில் நிலை) *யோக மாயாவும்* (இறைவனின் படைப்பாற்றல்) இவ்விரு உருவங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன.



38



39

38 இறுதியாக நாம் காண்பது புதுக்கோட்டை மாவட்டத்தில் ***திருகோகர்ணத்தில்*** உள்ள *பிரஹதாம்பாள்* கோவிலில் உள்ள சப்த கன்னிகையர் எனப்படும் ஏழு கன்னிகைகள், *வீரபத்ரர்* மற்றும் *கணேசர்* உருவங்களாகும். இவை வலப்புறமிருந்து இடப்புறம் வரை காட்டப்பட்டுள்ளது. *விநாயகக்* கடவுளுக்கு அடுத்தபடியாக *வீரபத்திரர்* காட்டப்பட்டுள்ளார். வீரபத்திரரிடமிருந்து தொடங்கி *பிராமி, வைஷ்ணவி, மகேஸ்வரி, வராஹி, இந்திராணி, சாமுண்டா, கௌமாரி* உள்ளிட்ட ஏழு கன்னியர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

39 இப்போது நாங்கள் இந்தியாவின் மூலை முடுக்குகளில் மக்கள் அணுகவியலா, ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள பாறை மற்றும் குகை ஒவிய இடங்களுக்கு சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஆய்வுக்குழு மேற்கொண்ட பயணத்தின் ஒளிவில்லைகளை உங்களுக்கு அளிக்கிறோம். இக்காட்சிக் கூடத்தினை நீங்கள் கண்டு களித்திருப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம். மீண்டும் தங்களை வரவேற்கின்றோம். நன்றி.

